பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**20 02 2026** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** இலங்கை உடனான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2)** தமிழகத்தின் விமான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**3)** நகராட்சி நிர்வாகத்துறையில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக வழக்கு பதிவு செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம், ஊழல் தடுப்பு கண்காணிப்பு ஆணையத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

**4)** வங்கக்கடலில் அடுத்த **48** மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** உகாண்டா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரகு மாரிசாமி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

இலங்கை உடனான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இலங்கை அதிபர் திரு அனுரகுமார திசநாயக்கே-வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் சமூக வலைதளத்தில் பிரதமர் இக்கருத்தை தமிழில் பதிவு செய்துள்ளார்.

இந்த சந்திப்பு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்தி, கட்டமைப்பு, சுகாதாரம், திறன் மேம்பாடு, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் விமான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்

கோவை விமான நிலையத்தில் நடைபெற்ற மலிவு விலை உணவக திறப்பு விழாவில் பங்கேற்று பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — எல். முருகன் - 44 Sec. )***

<<<<<<>>>>>>

ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஏற்றுமதி ஊக்குவிப்பு இயக்கத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

சிறு-குறு தொழில்துறையினர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கு இது உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

சிறு-குறு தொழில்துறையினர் வளர்ச்சிக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் திரு பியூஷ் கோயல் பட்டியலிட்டார்.

<<<<<<>>>>>>

எய்ம்ஸ் மருத்துவமனை வளாகங்களில் மக்கள் மருந்தகங்கள் தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தை சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில், எய்ம்ஸ் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள் பங்கேற்ற மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

நாடு முழுவதும் 20 எய்ம்ஸ் மருத்துவமனைகள் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்காண்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உட்பட நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

கல்வித்துறையில் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு தேசிய கல்விக்கொள்கை உதவிடும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஸ்பெயின் நாட்டு பிரதிநிதிகள் பங்கேற்ற உயர்கல்வி தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தங்களது வளாகங்களை தொடங்க முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் இளையோர் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம் நடத்தியது கண்டிக்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ள இந்த மாநாட்டில், காங்கிரஸ் கட்சியினர் நடந்து கொண்ட விதம் ஏற்புடையது அல்ல என்றார்.

மத்திய அமைச்சர் திரு புபேந்தர் யாதவும், காங்கிரஸ் கட்சியினரின் நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், காங்கிரஸ் கட்சியினரின் செயல்பாடு நாட்டு நலனுக்கு எதிராக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் கடந்த ஆண்டு இறுதிவரை 14 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

உற்பத்தித்துறையின் வளர்ச்சிக்கான இந்த திட்டத்தின்கீழ், 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

நகராட்சி நிர்வாகத் துறையில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக அமலாக்கத்துறை பகிர்ந்த தகவலின் அடிப்படையில், முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம், ஊழல் தடுப்பு கண்காணிப்பு ஆணையத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு எம் எம் ஸ்ரீவஸ்தவா, நீதிபதி திரு அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

அமலாக்கத்துறை பகிர்ந்துள்ள ஆவணங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு போதுமானது என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவு வரவேற்கத்தக்கது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த முறைகேடு தொடர்பான முழு உண்மை இந்த உத்தரவின்மூலம் வெளிவரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

முறைகேடுகளில் ஈடுபட்ட திமுக-விற்கு சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

மாம்பழம் சின்னத்தை முடக்கம் செய்யவும், தம்மை தலைவராக அங்கீகரிக்கும் வரை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்பை தள்ளிவைக்கக்கோரி தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரியும் பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு தாக்கல் செய்த மனுக்களை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இம்மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

உட்கட்சி விவகாரம் தொடர்பாக, உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதை சுட்டிக்காட்டி, இந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுவதாகவும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சேலம் ஜவ்வரிசி முதல் முறையாக கனடாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டோரின் வாழ்வாதாரம் மேம்பட வாய்ப்புள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜய்குமார் - 52 Sec. )***

<<<<<>>>>>

வங்கக்கடலில் அடுத்த 48 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களுக்கு

உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

துத்துக்குடியில் சட்டப்பேரவைத் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ளவர்கள் பங்கேற்ற ஆலோசனைக்கூட்டம் ஆட்சியர் திரு இளம்பகவத் தலைமையில் இன்று நடைபெற்றது.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

-------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

-------------

மதுரை கூடல் அழகர் பெருமாள் கோவிலில் மாசி தெப்பத் திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

------------------

விழுப்புரம் மாவட்டத்தில் வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு கண்காணிப்புக்குழு கூட்டம் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உகாண்டா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரகு மாரிசாமி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-9, 21-7** என்ற செட் கணக்கில், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் **Shashaank Sai Munnangi-**ஐ வென்றார்.

**Lakshay Sharma, Gagan Palyan, Saneeth Dayanand, Anupama Upadhayaya, Mansi Singh, Vennala Kalagotla** ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

---------------

பெங்களூருவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **6-3, 1-6, 6-4,** என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Taylah Pareston-**ஐ வென்றார்.

-----------------

சிங்கப்பூர் **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய் வெற்றிபெற்றார்.

**<<<<<<END>>>>>>**